# வீரமாமுனிவம்

(வீரமாமுனிவர் அறக்கட்டளைக் கருத்தரங்க மலர்)



தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை – 625018.

# வீரமாமுனிவம்

(வீரமாமுனிவர் அறக்கட்டளைக் கருத்தரங்க மலர்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் க.லதா
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் நா.ரேணுகா

தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18.

# பொருளடக்கம்

பதிப்புரை

வாழ்த்துரை

அன்புரை

வழி வழியாக... பகிரல்கள்

அடிகளாரும் அரும்பணியும்

1. வீரமாமுனிவரின் இறைப்பணியும் இன்தமிழ்ப்பணியும் 1
2. மருத்துவரான மாமுனி 17
3. வீரமாமுனிவர் எழுத்துவழி கிறித்தவம் தமிழ்ப்பண்பாட்டுவயமாதல் 34
4. பரமார்த்தகுருவின் கதையில் நகைச்சுவை 47
5. படலம் பகரும் பசுமை நெறி 66
6. பின்னிணைப்புகள் 80

# வீரமாமுனிவர் எழுத்துவழி கிறித்தவம் தமிழ்ப் பண்பாட்டுவயமாதல்

முனைவர் பி. திவ்யா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு),
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),
மதுரை – 18.

சமயம் என்பது மனிதர்களைச் சமைக்க அதாவது வழிப்படுத்தத் தோன்றியவை. மனிதன் வாழவேண்டிய வழிமுறைகளையும் கடைபிடிக்கவேண்டி கொள்கை, கோட்பாடுகளையும் எடுத்துரைத்து, இறைக்கோட்பாட்டை முன்னிறுத்தி வழிப்படுத்துபவை சமயங்கள் . ஒரு சமயம் உலகப்பொதுவான, அனைவருக்கும் உரித்தான சமயமாக நிறுவப்பட்டாலும் அச்சமயம் தோன்றிய இடத்தின் பண்பாட்டையும் உள்வாங்கியே வளரும். பண்பாடு என்பது மனிதரைப் பண்படுத்த எழுந்தவை என்றும் பண்பட்ட சமூகத்தின் பாடமைந்த வெளிப்பாடே பண்பாடு என்னும் இருவேறு பார்வைகள் முன்வைக்கப்படுகின்றன. கலை, கலாச்சாரம் முதலான பல கூறுகளைத் தன்னுள் கொண்டதாகப் பண்பாடு இயங்குகின்றது. ஒரு கூடிவாழும் குழுமம் ஒரே ஒத்த பண்பாட்டைப் பின்பற்றுகின்றன. மிக வளர்ந்த தொன்மையான சமூகம் வளமான பண்பாட்டைத் தனதாகக் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட சமூகத்தில் உதிக்கும் ஒரு சமயம் அச்சமூகத்தின் பண்பாடுகளையும் தனதாகக் கொண்டு தோற்றம் பெறும். இவ்வாறு ஒரு நிலத்தில் தோன்றிய சமயம் வேறு சமூக நிலத்திற்குப் பரவும் போது, தோன்றிய நிலத்தின் பண்பாட்டோடே பெயரும். அப்படி இடம்பெயரும் போது தான் தோன்றிய சமூகத்தின் பண்பாடு வளமானதாக இருந்து, பெயரும் நிலம் தொன்மையான பண்பாடு அற்றதாக இருப்பின் அங்கு பெரும் சிக்கல்கள் இருப்பதில்லை. ஆனால் புதிதாக பரவ முயலும் நிலம் ஆழ்ந்த, தொன்மையான பண்பாடு கொண்டதாய் இருக்குமாயின் அப்பண்பாட்டைக் கடந்து பரவுதல் கடினமானதாக இருக்கும்.





கிறித்தவம் யூதமரபின் தொடர்ச்சியாக, யூதநிலத்தில் தோற்றம் பெற்றது. எனவே கிறித்தவத்தில் அதிகமாக யூத சமயத்தின், யூத பண்பாட்டின் தாக்கம் இருக்கும். குறிப்பாக வழிபாட்டி போது தலையில் முக்காடிடுதல், நாற்பது நாட்கள் விரதம் இருப்பது உள்ளிட்டவை இன்றும் நடைமுறையில் இருப்பதை அறியலாம். இப்படி யூதமரபில் முகிழ்த்து, யூதப் பண்பாட்டை உள்வாங்கி, செரித்து வளர்ந்திருந்தாலும் கிறத்தவம் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பரவுகையில் அப்பகுதியின் பண்பாட்டை ஏற்று, மதித்து, உள்வாங்கி அந்தந்த நிலத்திற்குத் தகுந்தபடி இவ்விடத்திற்கான, மாறுபட்ட கிறித்தவத்தைக் கட்டமைக்கும். குறிப்பாக கத்தோலிக்கத் திருஅவை இத்தகு மாற்றங்களை ஏற்று இயங்குவதைப் பெருவாரியாகக் காணலாம். தன் அடிப்படை நம்பிக்கை, மறையில் நிலைத்திருந்தாலும் வழிபாட்டுமுறைகள் தொடங்கி பல கூறுகள் அந்தந்த நிலத்திற்குத் தகுந்தபடி அமைகிறன.

ஒவ்வொரு நாட்டின் நடைமுறைக்கும் தகுந்த முறையில் நாம் வழிபாடு முறைகள், கோவில் அமைப்புகள், குறிப்பாக அன்னை மரியின் உருவம், உடை அலங்காரம், பக்தி முதலியவற்றில் எந்நிலத்தில் பரவுகிறதோ அந்நிலத்தின் தாக்கம் பரவலாகி அதன் வழி அம்மக்கள் எவ்வித உறுத்தலும் இன்றி இயல்பாய் சமயத்தில் கலக்கத் துணையாகிறது.

தமிழகம் ஏற்கனவே ஆழமான பண்பாடும் அதன்வழி பல நுணுக்கமான பழக்கவழக்கங்களும் கொண்ட சமூகமாகும். இத்தகு வீரியமிக்க பண்பாட்டுச் சூழலில் கிறித்தவம் பரவுதல் என்பதில் பல்வேறு தடைகள் உண்டு. குறிப்பாக வாழ்வியலோடு கலந்த நம்பிக்கைகள் பெருகிய நம் சமூகத்தில் சமய மாற்றத்தோடு பண்பாட்டு மாற்றமும் நிகழ்வது கடினமானதாகும். துவிர, கிறித்தவத்தின் தொடக்கம் யூத நிலமாக இருந்தாலும் யூதத்தின் பல சடங்குகளை வெற்றுச் சடங்குகளை இயேசு மறுக்கிறார், எதிர்க்கிறார். இத்தகு பதிவுகள் விவிலியத்திலும் உள்ளது குறிப்பிடத் தகுந்தது. மேலும், இயேசுவிற்குப் பின்னர் இயேசுவின் சீடர்களும் “யூதர் என்றோ? கிரேக்கர் என்றோ? அடிமைகள் என்றோ? உரிமைக் குடிமக்கள் என்றோ? பாகுபாடின்றி இருத்தலை வலியுறுத்துவதோடு, கிறித்தவத்தை யூதசார்பற்றதாக உலகப் பொதுவாதாக, அவைருக்கும் உரியதாக வளர்க்க முயன்றமையும்